# 7

## சபை:

# இதில் சேர வேண்டுமா?

## விஷயம்

1. **சபையில் சேர்ந்ததற்கான முன்மாதிரியோ அல்லது கட்டளையோ புதிய ஏற்பாட்டில் உள்ளதா?**
   அ. ஆம் என்றால், எங்குள்ளது? இல்லை என்றால், வசன ரீதியாக ஒருவர் சபையில் சேர முடியுமா?
   ஆ. ஒருவர் கர்த்தரை எவ்விதம் அறிகின்றார் (1 யோவா. 2:3, 4)?
   இ. உதாரணங்களின் நோக்கம் என்ன (1 பேது. 2:21)? எந்த அளவுக்கு அவைகளை போலச் செய்யப்பட வேண்டியவைகளாய் உள்ளன (1 கொரி. 4:6)?
   ஈ. உதாரணம் அல்லது கட்டளையினால் சபையில் சேர்ந்து கொள்வதாய் இருக்க முடியுமா?
2. **"சீஷர்களுடன் சேர்ந்து கொள்ள" பவுலின் விருப்பம் பற்றி விளக்கப்படுத்தவும் (அப். 9:26)?**
   அ. பவுல் எருசலேமில் இருந்த சபையுடன் சேர்ந்து கொள்ள விரும்பினாரா?
   ஆ. பவுல் எப்பொழுது சபையின் உறுப்பினரானார் (அப். 22:16; 1 கொரி. 12:13)?
   இ. இந்த வேளையில் பவுல் எவ்வளவு காலமாகப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் (கலா. 1:17, 18)?
3. **"சேர்ந்து கொள்ளுதல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பதினோரு முறை பயன்படுத்தப்படுகின்றது. இந்த வசனக் குறிப்புகளில் இருந்து, இது சபையில் சேர்ந்து கொள்வது என்பதை ஒருக்காலும் குறிப்பிடுவதில்லை என்பதைக் காண்பிக்கவும் (மத். 19:6; மாற். 10:9; லூக். 15:15; அப். 5:13, 36; 8:29; 9:26; 18:7; 1 கொரி. 6:16, 17; எபே. 5:31).**

## சபை உறுப்பினர்த்துவம் என்பது ஒரு தெய்வீக உரிமையாக உள்ளது

1. **சபையில் சேர்ப்பவர் யார் (அப். 2:41, 47)? இந்த மக்களைக் கர்த்தர் எப்பொழுது சபையில் சேர்த்துக் கொண்டார் (அப். 2:38, 41, 47)?**
2. **சரீரத்தில் அவயங்களை அமைத்து வைக்கிறவர் யார் (1 கொரி. 12:18)?**

அ. ஆனால் சரீரம் என்பது என்னவாக உள்ளது (1 கொரி. 12:27; கொலோ. 1:18)?

ஆ. தேவன் (சபை என்ற) சரீரத்தில் கொரிந்தியர்களை எப்பொழுது அமைத்து வைத்தார் (1 கொரி. 12:13)?

இ. இரட்சிக்கப்பட்ட யாவரையும் சபைக்குள் சேர்க்கின்றவர் யார் (அப். 2:41, 47ஆ)? ஒருவர் (சபைக்குள்) சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு, அவர் இன்னொன்றில் சேர்ந்தால் என்னவாகும் (மத். 15:13)?

## இரட்சிக்கப்பட்ட யாவருக்கும் உறுப்பினர்த்துவத்தைத் தேவன் கொடுக்கிறார்

1. ***"சபை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*** *"வெளியே அழைக்கப்பட்டவர்கள்"*
   *சுவிசேஷத்தினால் ஒருவர் வெளியே அழைக்கப்படும் பொழுது, அவர் என்னவாக இருக்கின்றார் (2 தெச. 2:14; 1:1)?*
2. ***எல்லாரும் யாருக்குள் மீட்கப்பட்டுள்ளனர் (எபே. 1:7; கொலோ. 1:14)?***
   - அ. ஒருவர் எப்பொழுது மீட்கப்படுகின்றார் (கலா. 3:26, 27)?
   - ஆ. ஆனால் தேவன் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு என்ன செய்தார் (அப். 2:41, 47)? என்றால், மீட்கப்பட்ட யாவரும் சபையின் உறுப்பினர்களாய் இருப்பதில்லையா?
3. ***எல்லாரும் யாருக்குள் ஒப்புரவாக்கப்பட்டுள்ளனர் (2 கொரி. 5:18)?***
   - அ. யூதரையும் புறஜாதியாரையும் தேவன் எதற்குள் ஒப்புரவாக்கினார் (எபே. 2:15, 16)?
   - ஆ. ஆனால் கிறிஸ்துவின் சரீரம் என்பது என்ன (எபே. 1:22, 23; கொலோ. 1:18)?
   - இ. எல்லாரும் எவ்விதத்தில் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாகின்றனர் 1 கொரி. 12:13)? என்றால், ஒப்புரவாக்கப்பட்ட எல்லாரும் சபையின் உறுப்பினர்களாயிருப்பதில்லையா?
4. ***தேவனுடைய வீடு என்றால் என்ன (1 தீமோ. 3:15)?***
   - அ. அப். 16:31, 32; 1 கொரி. 1:16; எபி. 11:7 ஆகியவற்றில் "வீடு" ன்பதினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன?
   - ஆ. என்றால், 1 தீமோ. 3:15ல் "தேவனுடைய வீடு" என்பது என்ன?
   - இ. தேவன் தம்முடைய குடும்பம் அல்லது தம்முடைய "வீடு" என்பதற்குப் புறம்பே பிள்ளைகள் எவர்களையாவது கொண்டுள்ளாரா?
   - ஈ. சபை என்பது தேவனுடைய குடும்பமாய் இருப்பதால், இரட்சிக்கப்பட்ட யாவரும் இந்தக் குடும்பத்தில் இருப்பதில்லையா? என்றால், இரட்சிக்கப்பட்ட யாவரும் சபையில் உள்ளனர் என்ற கருத்து தொடருவதில்லையா?
   - உ. ஒருவர் தமது உடல்ரீதியான குடும்பத்தில் "சேருகின்றாரா"

*அல்லது அதற்குள் அவர் பிறப்புரிமையைக் கொண்டுள்ளாரா?*

ஊ. *ஒருவர் எப்பொழுது தேவனுடைய குடும்பத்திற்குள் பிறக்கின்றார் (யோவா. 3:5)?*

எ. *என்றால், ஒருவர் எப்பொழுது தேவனுடைய குடும்பமான சபையின் உறுப்பினராகின்றார்?*

## மிகவும் முக்கியமான கேள்வி

1. ***பெந்தெகொஸ்தே நாளன்று மக்கள் கேட்ட கேள்வி என்ன (அப். 2:37)?***
   - அ. *இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்யும்படி கூறப்பட்டது (அப். 2:38)?*
   - ஆ. *அவர்களை சபையில் சேர்ந்துகொள்ளும்படி கூறப்படாதது ஏன் (அப். 2:41, 47)?*
2. ***மனம் வருந்திய சவுல் இயேசுவிடம் கேட்டது என்ன (அப். 9:6)?***
   - அ. *அவரது கேள்விக்குக் கிடைத்த பதில் என்ன (அப். 9:6, 18; 22:16)?*
   - ஆ. *அவர் சபையில் சேர்ந்துகொள்ளும்படி கூறப்படாதது ஏன் (அப். 2:41, 47)?*
3. ***சிறையதிகாரி கேட்டது என்ன? அவர் என்ன செய்யும்படி றப்பட்டது (அப். 16:30-34)?***

   *இந்தக் கீழ்ப்படிதல் அவரை எதற்குள் உறுப்பினராக்கியது (பிலி. 1:1; 4:15)?*
4. ***ஆகையால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான கேள்வி எது (அப். 16:30)?***